


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.1.2025) சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற கலைத் திருவிழாவில் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கலையரசன், கலையரசி விருது, பரிசு கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திருமதி.சோ.மதுமதி. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் பொ.சங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதிரஷ்மி சித்தார்த் ஜகடே, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் மரு.மா.ஆர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள். மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.1.2025) சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற கலைத் திருவிழாவில் "சூழல் பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு" என்ற விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியை பார்வையிட்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திருமதி.சோ.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் பொ.சங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகுடே, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் மரு.மா.ஆர்த்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டு மாணவர்கள் கல்வி மற்றும் அனைத்துத் துறைகளிலும்

# முதல்வனாக வேண்டும் என்பதே, முதலமைச்சரின் இலட்சியம்!

### சென்னையில் நடைபெற்ற - அரசுப் பள்ளி மாணவர்களுக்கு விருது வழங்கும் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, ஜன.26-

**சென்னையில், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை சார்பில், அரசு, பள்ளி மாணவ - மாணவிகளின் தனித்திறமைகளைக் கண்டறிந்து ஊக்குவிக்கும் விதமாக, தமிழ்நாடெங்கும் நடைபெற்ற கலைத் திருவிழாவில் வெற்றி பெற்ற மாணவ - மாணவிகளுக்கு, கலையரசன் - கலையரசி விருதுகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.**

**அப்போது அவர், நம் மாணவச் செல்வங்கள் கல்வியில் மட்டுமல்லாமல், கலையிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று வாழ்த்திச் சிறப்புரையாற்றினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

இந்த கலைநிகழ்ச்சிகளை நடத்தும் அனைத்துக் குழந்தைகளுக்கும் மீண்டும் ஒருமுறை நம் கைத்தட்டல்களின் மூலம் நம் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வோம். நம் அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். அவர்கள் பயிற்சியே செய்யவில்லை, பயிற்சியே இல்லாமல் பண்ணினார்கள் என்றாலும், இவ்வளவு சிறப்பாக ஒரு கலைநிகழ்ச்சியை நடத்த முடியுமா, என்பதை நிரூபித்துக் காட்டிய அத்தனை குழந்தைகளுக்கும் எனது பாராட்டுகள், வாழ்த்துகள்.

**அனைவரின் பொறுப்பு!**

அதுமட்டுமல்ல, ஏதோ ஒரு கலைநிகழ்ச்சியை நடத்தினோம், ஆடல், பாடல் நிகழ்ச்சியை நடத்தினோம் என்றில்லாமல், ஒரு சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையில், `சூழல் பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு' என்ற தலைப்பில் நடந்த கலைநிகழ்ச்சியை மீண்டும் எத்தனை முறை பாராட்டினாலும், அது போதாது.

மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின் படி, தமிழ்நாடு எங்கும் நடத்தப்பட்ட கலைத் திருவிழாவில் வெற்றிப்பெற்ற மாணவ, மாணவிகளுக்கு இன்றைக்கு கலை அரசி, கலை அரசன் என்ற விருதுகளை வழங்குகின்ற இந்த சிறப்புக்குரிய விழாவில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்தித்து, உங்களிடத்தில் உரையாடுவதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

**இது எங்களின் உலகம்!**

பொதுவாக, பெரியவர்கள்தான் குழந்தைகளுக்கு, மாணவச் செல்வங்களுக்கு அறிவுரைகள் கூறுவார்கள். ஆனால், இன்றைக்கு குழந்தைகள், மாணவச் செல்வங்களாகிய நீங்கள் எங்களுக்குத் தவிர்க்க முடியாத, காலத்திற்கு ஏற்ற ஒரு சிறந்த அறிவுரையை சொல்லி இருக்கிறீர்கள். அதற்கு காரணம் என்னவென்றால், நாளைக்கு இது உங்களின் உலகமாக இருக்க போகிறது. நீங்கள் இங்கு அறிவுரை மட்டும் சொல்லவில்லை, ஆர்டர் போட்டு இருக்கிறீர்கள். இது எங்களின் உலகம், இதை பத்திரமாகப் பார்த்து, எங்களின் கைகளில் ஒப்படையுங்கள் என்று சொல்லி இருக்கிறீர்கள். அதற்கான பொறுப்பு இப்போது எங்களிடத்தில் வழங்கப்பட்டு இருக்கிறது.

இங்கு வந்திருக்கின்ற கலை அரசன்கள், கலை அரசிகள் உங்களையெல்லாம் பார்க்கும்போது ஒரு புதிய உற்சாகம், உணர்ச்சி ஏற்படுகிறது. தமிழ்நாட்டின் மாணவர்கள் நீங்கள் எப்பொழுதுமே ஸ்பெஷல். இன்னும் சொல்லப்போனால், எக்ஸ்ட்ரா ஸ்பெஷல். பிற மாநிலக் குழந்தைகள், மாணவச் செல்வங்




களெல்லாம் ஏதாவது ஒரு விஷயத்தில் தனித்துவமானவர்களாக இருப்பார்கள்.

**தனித்திறமைகளிலும் முன்னிலை**

ஒன்று படிப்பில் மிக ஆர்வம் உள்ளவர்களாக இருப்பார்கள். படிப்பில் ஆர்வமாக இருந்தார்கள் என்றால், மற்றவற்றில் குறைவாகத்தான் கவனம் செலுத்துவார்கள். ஒன்று விளையாட்டில் ஆர்வமாக இருப்பார்கள். அப்படி இருக்கும்போது மற்ற தனித்திறன்களில் குறைவாக ஆர்வம் காட்டுவார்கள். ஆனால், தமிழ்நாட்டு மாணவர்களாகிய நீங்கள் மட்டும்தான் படிப்பிலும் முன்னிலை, விளையாட்டிலும் முன்னிலை, தனித்திறமைகளிலும் முன்னிலை பெற்று, எப்போதும் சாதித்து வருகிறீர்கள். விளையாட்டுத்துறை அமைச்சராக அது எனக்குத் தெரியும். அதை உணர்ந்துதான் இங்கு சொல்ல விரும்புகிறேன். இந்திய அளவில் தமிழ்நாட்டு மாணவர்கள் கல்வியில் மட்டுமல்ல, கலையிலும் அரசர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில், இந்த நிகழ்ச்சி இவ்வளவு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

தமிழ்நாடு எங்கும் உள்ள பள்ளிகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 46 லட்சம் மாணவர்கள் இந்தக் கலைத் திருவிழாவில் பங்கேற்று உங்களின் திறமையை நீங்கள் வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். உங்கள் அத்தனை பேருக்கும் எனது வாழ்த்துகளை இந்த நிகழ்ச்சியின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநில அளவிலான போட்டிகளில் மட்டும் கிட்டத்தட்ட 13 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவச் செல்வங்கள் பங்கேற்று, அதிலிருந்து இத்தனை மாணவர்கள் இங்கு வருகை தந்துள்ளீர்கள். இதுவரைக்கும் கடந்த மூன்று ஆண்டுகளாக, ஆறாம் வகுப்பிலிருந்து, பன்னிரெண்டாம் வகுக்கும் வரைக்கும் இந்த நிகழ்ச்சி நடந்தது. இந்த ஆண்டுதான் முதன் முறையாக ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரெட்டாம் வகுப்புவரை எல்லா மாணவர்களும் பங்கேற்கும் வண்ணம் இந்த நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

உங்கள் ஒவ்வொருவரின் முகத்தைப் பார்க்கும்போது, எதிர்கால கலைஞரின் முகத்தைப் பார்ப்பது போல் இருக்கிறது. எந்தவொரு சமூகமும், பண்பட்ட சமூகமாக இருக்க வேண்டும் என்றால், அதற்கு கலை உணர்ச்சி அதிகமான இருக்க வேண்டும்.

முத்தமிழறிஞர் கலைஞரைப்பற்றி உங்களுக்குத் தெரியும். அவர் பெயரே கலைஞர். அவருக்குப் பல முகங்கள் உண்டு. எழுத்தாளர், பத்திரிக்கையாளர், திரைக்கதை ஆசிரியர், பாடலாசிரியர், அரசியல்வாதி, முதலமைச்சர் இப்படி பலத் துறைகளில் முத்திரைப் பதித்தவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள்.

இத்தனைத் துறைகளிலும் மிகப்பெரிய ஆளுமையாக இருந்தாலும், கலைஞர் என்ற பெயர்தான் அவருக்கு நிலைத்தது. இங்கு வந்திருக்கின்ற மாணவச் செல்வங்கள், நீங்கள் ஒவ்வொருவரும் மிகச்சிறந்த கலைஞர்கள். நீங்கள் மிகச்சிறந்த கலைஞர்கள் என்பதை, இந்த மேடையில் நிரூபித்துக் காட்டி இருக்கிறீர்கள். கலைஞரின் வழியில் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும், கலைசார்ந்த உங்களின் திறன்களை வளர்த்துகொள்ள வேண்டும் என்றுதான், இந்த கலைத் திருவிழாவை நடத்த உத்தரவிட்டார்.

**ஏராளமான திட்டங்கள்!**

கல்வியைப் பொறுத்தவரை, தொடக்கக் கல்வி முதல் `இல்லம் தேடி கல்வி', `முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்', `புதுமைப்பெண் திட்டம்', `தமிழ்ப் புதல்வன் திட்டம்', `எண்ணும், எழுத்தும் திட்டம்', `நான் முதல்வன் திட்டம்' என இப்படி ஏராளமான திட்டங்களை நம் திராவிட மாடல் அரசு, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களுக்காகச் செயல்படுத்தி இருக்கிறார்.

கல்வியில் மட்டுமல்ல தமிழ்நாட்டு மாணவர்களாகிய நீங்கள் அனைத்து துறைகளிலும் முதல்வராக வேண்டும் என்பதுதான் நம் முதலமைச்சரின் ஒரே இலட்சியம். கல்வி நிலையங்களில் கல்வி எவ்வளவு முக்கியமோ, அதே அளவு உங்களின் சிந்தனைகளை தூண்டுவதற்கான முயற்சிகளும் மிகமிக முக்கியம். அதற்கான களமாகத்தான் இந்த கலைத் திருவிழா வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற கலைத்திருவிழாக்களில் வெற்றி பெற்ற பலரை இன்றைக்கு நாம் பல்வேறு தொலைக்காட்சிகளின் ரியாலிட்டி ஷோக்களில் சாதித்து, பாராட்டுகளைப் பெற்றிருப்பதை, பல வெற்றிகளைப் பெற்றிருப்பதை நாம் தொடர்ந்து பார்த்து வருகிறோம். அவர்கள் பாடகர்களாக, நடனக் கலைஞர்களாக, இசைக் கலைஞர்களாக வலம் வந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களைப்போலவே நீங்களும் எதிர்காலத்தில் உங்களின் துறையில் சாதிப்பீர்கள் என்ற நம்பிக்கை அத்தனைப் பேருக்கும் உண்டு. இந்தக் கலைத் திருவிழா உங்கள் திறமைக்கான ஒரு ஏவுதளமாக இருக்கும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

**மாணவர்களின் உயர்வு!**

இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். உங்களுக்கு ஒரு மிகச் சிறந்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கிடைத்து இருக்கிறார். அந்த அளவிற்கு அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்வுக்கு, நம் அமைச்சர் அவர்கள் உழைத்துக்கொண்டு இருக்கிறார். என் நெருங்கிய நண்பர் அவர். சில நேரத்தில் அவரைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கும், சில நேரத்தில் பொறாமையாகவும் இருக்கும். ஏனென்றால், பாதி நேரம் ஏதாவது வெளிநாட்டில், சாதித்த மாணவர்களுடன் சுற்றுலாவில்தான் இருப்பார். இப்போது பேசும்போது கூடச் சொன்னார், இந்தக் குழந்தைகள் கேட்கிறதா, கேட்கிறதா என்று கேட்கும்போது, நான் குழந்தைகளை டெல்லிக்கு அழைத்துச் சென்று கேட்கிறதா, கேட்கிறதா என்று டெல்லியிடம் கேட்கப் போகிறேன் என்று சொன்னார். நிச்சயம் அமைச்சர் அதைச் செய்யவேண்டும். அந்த மாணவர்களின் குரல் நிச்சயம், டெல்லியில் கேட்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**எல்லையில்லா மகிழ்ச்சி!**

கடந்த திங்கட்கிழமைக்கூட நான் ஒரு செய்தியைப் பார்த்தேன். தென்காசியைச் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவர்கள், மதுரையில் இருந்து சென்னைக்கு விமானத்தில் நம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் ஏற்பாட்டில் வந்து இருக்கிறார்கள். முதன்முறையாக விமானத்தில் பறந்தபோது, அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. உங்களின் எல்லையில்லா மகிழ்ச்சியை காண வேண்டும் என்பதற்காகத்தான் நம் அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

ஆகவே, நீங்கள் உங்கள் திறமைகளை வளர்த்துக்கொண்டே இருங்கள். உங்களின் திறமைக்குப் பரிசாக உலகின் எந்த மூலைக்கும், வாழ்வின் எந்த உயரத்திற்கும் கூட்டிச் செல்ல, நம் திராவிட மாடல் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் என்றும் உங்களுக்குத் துணை நிற்பார்கள். வழக்கமாக நான் சொல்கின்ற ஒரு விஷயம்தான். அதை மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். விளையாட்டுத்துறைக்கான அமைச்சர் என்ற வகையில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சருக்கும், இங்கு வந்திருக்கின்ற ஆசிரியர் பெருமக்களுக்கும் ஒரு கோரிக்கை.

**தயவுசெய்து விளையாட விடுங்கள்**

எங்களின் விளையாட்டு வகுப்பை, கணக்கு, அறிவியல் ஆசிரியர்கள் தயவுசெய்து கடன் வாங்காதீர்கள். மாணவர்களை அந்த விளையாட்டு வகுப்புகளில் தயவுசெய்து விளையாட விடுங்கள். `நன்றாக விளையாடுகின்ற குழந்தைதான் நன்றாகப் படிக்கும்' என்று அறிவியலே சொல்கிறது. வேண்டுமென்றால், உங்களின் அறிவியல், கணக்கு வகுப்புகளை, நீங்கள் விளையாட்டு வகுப்புக்குக் கடன் கொடுத்தீர்கள் என்றால், நாங்கள் சாதனை செய்து காட்டுகிறோம். இந்தக் கோரிக்கையை நம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கு `கலை அரசன்', `கலை அரசி'களாக வெற்றிப்பெற்று வந்துள்ள உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் உங்கள் சிறகுகளை விரித்து உயர, உயர பறந்துகொண்டே இருக்க வேண்டும் என்றுச் சொல்லி, நம் முதலமைச்சர் அவர்கள் சொன்னதுதான் உங்களிடமிருந்து எதை வேண்டுமானாலும் பறித்து விடலாம், ஆனால், கல்வியை மட்டும் என்றும் பறிக்கவே முடியாது. உங்களிடமிருந்து பிரிக்கமுடியாத சொத்து எதுவென்றால், அது கல்வி மட்டும்தான்.

மாணவச் செல்வங்களாகிய நீங்கள், நம் முதலமைச்சர் சொல்வதுபோல, `உங்களின் வேலை, படிப்பது மட்டும்தான், படியுங்கள் மற்ற எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்' என்பார். நம் முதலமைச்சர் இருக்கிறார். அவர் பார்த்துக் கொள்வார் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பை அளித்த பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும், அந்த துறையைச் சார்ந்த அனைத்து அரசு அதிகாரிகளுக்கும், வந்திருக்கின்ற மாணவச் செல்வங்கள் உங்கள் அத்தனைப்பேருக்கும் மீண்டும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

அமைச்சர்கள் மா.சுப்ரமணியன், பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாநகர மேயர் பிரியா, பள்ளிக் கல்வித்துறைச் செயலாளர் மதுமதி ஐ.ஏ.எஸ்., ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் மருத்துவர் ஆர்த்தி ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மேலாண்மை இயக்குநர் முனைவர் சங்கர் ஐ.ஏ.எஸ்., சென்னை மாவட்ட ஆட்சியர் ராஷ்மி சித்தார்த் ஐ.ஏ.எஸ்., பள்ளிக் கல்வி இயக்குநர் கண்ணப்பன், ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் செயலர் ராமேஸ்வர முருகன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நரேஷ், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் துரைராஜ், உமாராணி, ராஜீவ்காந்தி, ராஜா தமிழ்மாறன், குணசேகரன், மணி, ஜாக்டோ - ஜியோ அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன் உள்பட பள்ளிக் கல்வித்துறை ஆசிரியர்கள், அலுவலர்கள், அரசுப் பள்ளி மாணவர்கள் உள்பட பல்ரும் கலந்துகொண்டனர்.